# කොළඹ විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව

## නීති පීඨය

## නීතිවේදී උපාධි පරීක්ෂණය, දෙවන වසර (මාර්ගගත) - 2020

## සාධාරණත්වය සහ භාර නීතිය

(පැ තුනයි)

මුළු ප්‍රශ්න සංඛ්‍යාව: 06

ඕනෑම ප්‍රශ්න <u>තුනකට</u> **පමණක්** පිළිතුරු සපයන්න.

(නොපැහැදිලි අත්අකුරු සඳහා ලකුණු අඩු කෙරේ.)

---

1. "සාධාරණත්වය නිශ්චිත රීති යොදන්නේ නැත, එය නිශ්චිත හැසිරීමක් තක්සේරු කරයි; මේ සඳහා නම්‍යශීලීතාවය සහ අභිමතය අවශ්‍ය වේ. බොහෝ සාධාරණත්ව මූලධර්ම පදනම් වන්නේ නියත රීතීන්ට වඩා හැසිරීමක අභිමතානුසාරී ප්‍රමිතීන් මතය; මෙම ප්‍රමිතීන් සාමාන්‍යයෙන් සද්භාවය, අවංකභාවය සහ ත්‍යාගශීලීත්වය යන මූලික ශික්ෂාවන්ගෙන් පැන නඟින අතර මේ අර්ථයෙන් සාපේක්ෂ ස්වභාවයක් ගනී."

   Samantha J Hepburn, *Principles of Equity and Trusts* (2nd edn; Cavendish Publishing (Australia) Pty Limited, 2001) PP. 7-8

   සාධාරණත්වයේ ස්වභාවය සහ සාධාරණත්වයේ ආප්ත ඇසුරින් උක්ත ප්‍රකාශය විවේචනාත්මකව අගයන්න. ඔබගේ පිළිතුර අදාළ අධිකාරීන් ඇසුරින් තහවුරු කරන්න.

2. පහත අවස්ථාවන්හිදී වලංගු භාරයක් ඇති වී ඇත්තේදැයි සාකච්ඡා කරන්න. ඔබගේ පිළිතුර අදාළ ව්‍යවස්ථාපිත ප්‍රතිපාදන සහ විනිශ්චිත නඩු තීරණ ඇසුරින් තහවුරු කරන්න.

   අ) ඇයගේ අන්තිම කැමති පත්‍රය මඟින්, ටීනා ඇයගේ අවශේෂ දේපළ ඇයගේ මිතුරු, හැරිසන්ට ලබා දුන්නේ, 'ඔහු, වෙන යම් කිසිඳු නීත්‍යානුකූල ප්‍රශ්නයක් නොමැතිව මිය ගියහොත්, මගේ සියලු දේපළ ඔහු මගේ සහෝදරියන් දෙදෙනාට භාර දෙනු ඇතැයි ඔහු කෙරෙහි පූර්ණ විශ්වාසයක් මා හට ඇති නිසා' යනුවෙන් ප්‍රකාශ කරමිනි. හැරිසන් දේපළ විකිණීමට අදහස් කරයි.

ආ) ඇන්ඩෲ, ඔහුගේ අනියම් බිරිඳ වන කැමිලියාට වාචික ප්‍රකාශයක් කළේ 'Ocean View' සුඛෝපභෝගී විලාව (luxury villa) සහ ඔහුගේ මර්සිඩීස් බෙන්ස් මෝටර් රථය ඇතුළත් ඔහුගේ දේපළ වයස අවුරුදු එකොළහක් වූ ඔහුගේ එකම දියණියට ලබා දෙන ලෙසයි. කෙසේ වෙතත්, ණය හිමියන්ගේ බිල්පත් පියවීම සඳහා එම දේපළ විකිණීමට කැමිලියා අදහස් කරයි.

ඇ) ෆ්‍රැන්සිස්කා සිය අන්තිම කැමති පත්‍රයේ සඳහන් කළේ, 'මගේ මව කැතරිනා, දේපළ හෝ ඇයගේ මරණය වන විට ඉන් ඉතිරි වූ දේ, මගේ දරුවන් දෙදෙනාට භාර දෙන ලෙස ඉල්ලා සිටිමි.' ෆ්‍රැන්සිස්කා, ඇගේ දේපළෙන් අඩක් ඇයගේ මව කැතරිනාට ඉතිරි කරමින් මිය ගියාය. කැතරිනා ඇයගේ දේපළ සියල්ලම කෙන්සිංටන් වැඩිහිටි සත්කාර නිවාසයට පැවරුවාය.

ඇ) ලියෝනාඩ්, සිය අන්තිම කැමති පත්‍රය මඟින් නිවාස දෙකක් භාරයකට ඉතිරි කරමින්, ඔහුගේ භාරකරුට නියම කළේ, 'මගේ දියණිය මාරියාට සුදුසු යැයි ඇය සිතන ඕනෑම එකක් ඇයට පවරන ලෙසත්, අනෙක මගේ දියණිය වාලට්ට පවරන ලෙසත්ය.' මාරියා, තෙස්තමේන්තුකරුට පෙර මිය ගියාය.

3. "වන්දි නම් පොදු නීති ප්‍රතිකර්මය අයිතියක් ලෙස පවතී, නමුත් එය නිතර සනාථ කරන්නේ අප්‍රමාණවත් (inadequate) බවයි. උල්ලංඝනයට ලක් කරන ලද ගිවිසුමේ විෂය වස්තුව අසමසම (unique) සහ හිලව් නොකළ හැකි (irreplaceable) යමක් නම් වන්දි ඉතා ප්‍රයෝජනවත් නොවේ. ගිවිසුම්ක උල්ලංඝනය සම්බන්ධ වන්නේ, අඛණ්ඩ හැසිරීමක් හෝ වරක් සිදු වූ පසු ආපසු හැරවිය නොහැකි හානියකට නම් ද වන්දි ප්‍රමාණවත් නොවේ."

උක්ත ප්‍රකාශය සාධාරණත්ව ප්‍රතිකර්ම ඇසුරින් විශ්ලේෂණය කරන්න. ඔබගේ පිළිතුර අදාළ අධිකාරීන් මඟින් තහවුරු කළ යුතුය.

4. (අ) සහ (ආ) කොටස් දෙකටම පිළිතුරු සපයන්න.

(අ) ඇන්ටෝනියෝ මහතා සහ ඇන්ටෝනියෝ මහත්මිය ඔවුන්ගේ පූර්ව විවාහ ගිවිසුමේ සඳහන් කළේ ඔවුන්ගේ ස්වකීය දේපළ, ජීවත් වන තැනැත්තාටත්, පසුව ඔවුන්ගේ දරුවන්ටත් වාසිදායකව බෙදා දිය යුතු බව ය. ඇන්ටෝනියෝ මහත්මිය මිය ගියේ ඇන්ටෝනියෝගේ පවුලේ එකම පුත්‍රයා වන බ්‍රයන්ගේ උපතෙන් වසර දෙකකට පසුවය. ඇන්ටෝනියෝ මහතා ක්‍රිස්ටිනා සමඟ නැවත විවාහ වූ අතර ඔවුන්ට දියණියන් දෙදෙනෙක් සිටියහ. ඔහු අන්තිම කැමති පත්‍රයක් රහිතව මිය ගියේය. ඔහුගේ මරණයෙන් ඉක්බිතිව, ක්‍රිස්ටිනා ඔහුගේ මුළු දේපළම අත්පත් කර ගත් අතර බ්‍රයන් හට එම පරිශ්‍රයට පිවිසීමට ඉඩ දුන්නේ නැත. ක්‍රිස්ටිනා දැන් මුළු දේපළම විකිණීම සඳහා ගැනුම්කරුවන් සොයමින් සිටී.

බ්‍රයන් ඔබගේ උපදේශය බලාපොරොත්තු වේ. අදාළ ව්‍යවස්ථාපිත ප්‍රතිපාදන සහ නඩු තීන්දු මත ඔහුට උපදෙස් දෙන්න.

(ආ) 'රීගල් සිනමා' හට කොළඹ එක් සිනමා ශාලාවක් අයත් වූ අතර සිනමාහල් දෙක එකට විකිණීමේ අදහසින් තවත් එකක් අත්පත් කර ගැනීමට අවශ්‍ය විය. ඒ සඳහා ඔවුන් අනෙක් සිනමා ශාලාව මිලදී ගැනීම සඳහා අනුබද්ධ සමාගමක් පිහිටුවා ගත් නමුත්, මිලදී ගැනීමට ප්‍රමාණවත් ප්‍රාග්ධනයක් නොතිබුණි. රීගල් සිනමාවේ අධ්‍යක්ෂවරුන් දෙදෙනෙකු අනුබද්ධිත සමාගමේ සමහර කොටස් මිලදී ගත් අතර එමගින් අවශ්‍ය ප්‍රාග්ධනය ලබා දී නව සිනමා ශාලාව මිලදී ගන්නා ලදී. සිනමාහල් දෙකම එක් සමාගමක් ලෙස විකුණනු ලැබූ අතර එය 'නව රීගල් සිනමා' ලෙස නැවත නම් කරන ලදී. සිනමාහල් දෙක එකට විකුණන මොහොතේ අධ්‍යක්ෂවරු ඔවුන්ගේ කොටස් විකිණීමෙන් සැලකිය යුතු ලාභයක් ලබා ගත්හ.

අධ්‍යක්ෂවරුන් සමාගම කෙරෙහි පැවති විශ්වාසනීය සම්බන්ධතාවය උල්ලංඝනය කර ඇති බවට චෝදනා කරමින්, කොටස් විකිණීමෙන් අධ්‍යක්ෂවරුන් ලැබූ ලාභය අය කර ගැනීමට, 'නව රීගල් සිනමා' හි නව පාලකයෝ, නඩු පැවරීමට සැලසුම් කරති.

නව රීගල් සිනමා වෙත උපදෙස් දෙන්න.

5. අප්පුහාමි, තම දරුවන් වන රවිඳු, රුවන් සහ කැසිල්ඩාගේ ප්‍රතිලාභය සඳහා පුත්තලමේ පිහිටි අක්කර 20 ක පොල් වගාව සහ පොල් වගාවේ පිහිටි හෝටලයක භාරකරු ලෙස චාල්ස් 1999 දී පත් කළේය. පොල් වගාවේ වැටවල් සවි කිරීමේදී පර්චස් 70 ක් සන්තකයේ තබා ගැනීමට චාල්ස් අපොහොසත් වී ඇති බව, 2001 දී අප්පුහාමිගේ අභාවයත් සමඟ රවිඳු දැන ගනී. රවිඳු මේ පිළිබඳව භාර දේපළට එහා පැත්තේ පොල් වගාව හිමි තම මාමණ්ඩිය වන සුමනසිරිට දන්වා සිටියේය. සුමනසිරි, 2002 දී භාර දේපළෙන් පෙර සඳහන් කළ පොල් වගාවේ පර්චස් 70 අත්පත් කර ගෙන වැටක් බැඳ සිය පොල් වගාව සමඟ එක් දේපළක් ලෙස පවත්වාගෙන ගියේය. සුමනසිරි, මෙම වංචාව ගැන නිහඬව සිටීමට රවිඳුට රු. 700,000 ක් ලබා දුන්නේය. රවිඳු, රුවන් සහ කැසිල්ඩා හෝටලය විකුණා එම මුදල් තමන්ගේ ව්‍යාපාර ආරම්භ කිරීම සඳහා බෙදා ගැනීමට අපේක්ෂා කරන අතර ගැනුම්කරුවන් සොයන ලෙස චාල්ස්ගෙන් ඉල්ලා සිටියහ. රුවන්, තම මිතුරා වන ප්‍රේමසිරිව චාල්ස්ට හඳුන්වා දුන් අතර, දේපළ ප්‍රේමසිරිට විකුණන ලෙස චාල්ස්ට නිර්දේශ කළේය. රවිඳු සහ කැසිල්ඩා මේ සඳහා එකඟ වූ අතර හෝටලය ප්‍රේමසිරිට විකුණන ලදී. පසුව, කැසිල්ඩාට දැනගන්නට ලැබෙන්නේ රුවන් විසින් හෝටලය වෙළඳපොළ මිලට වඩා අඩු මුදලකට විකිණීම සඳහා ප්‍රේමසිරි වෙතින් මුදල් ලබාගෙන ඇති බවයි.

දී ඇති සිද්ධිය තුළ පැන නඟින ඔවුන්ගේ අයිතිවාසිකම් සහ වගකීම් පිළිබඳව සියලු පාර්ශවයන්ට උපදෙස් දෙන්න.

6. ධර්ම පුද්ගලික සමාගමේ ප්‍රධාන විධායක නිලධාරී ධර්මසිරි පහත සඳහන් තත්වයන් යටතේ ඔහු විසින් පිහිටුවන ලද පුණ්‍ය භාරවල වලංගුභාවය දැන ගැනීමට අපේක්ෂා කරයි.

(අ) ධර්මසිරි, සුරතල් සතුන්ට ඇලුම් කරන්නෙකු වන අතර ඔහු වීදි සුනඛයන් හා බළලුන් ආරක්ෂා කිරීමට උනන්දු විය. ඔහු, අනාථ දරුවන් සහ අනාථ සුනඛයන් නඩත්තු කරන අනාථ නිවාසයක් බැලීමට ගියේය. අනාථ දරුවන්ට සහ සුනඛයන්ට සෞඛ්‍ය සම්පන්න ආහාර වේලක් ලබා දීම සඳහා ඔහු භාරයක් පිහිටුවීය.

(ආ) ධර්ම පුද්ගලික සමාගමේ සේවකයින් 1500 ක් සිටී. තම සේවකයින්ගේ සමහර දරුවන්ට ප්‍රමාණවත් ආදායමක් නොමැතිකම නිසා උසස් අධ්‍යාපනය හැදෑරීමට නොහැකි බව ධර්මසිරිට දැනගන්නට ලැබුණි. ශ්‍රී ලංකාවේ ඕනෑම රාජ්‍ය විශ්ව විද්‍යාලයක උසස් අධ්‍යාපනය සඳහා අවස්ථා ලබා ගන්නා තම සේවකයින්ගේ දරුවන්ට ලැප්ටොප් සහ නවාතැන් පහසුකම් සැපයීම සඳහා ධර්මසිරි භාරයක් ඇති කළේය.

(ඇ) ධර්මසිරි පාපන්දු ක්‍රීඩකයෙකු වන අතර ඔහුට හැකි පමණින් ක්‍රීඩාව ප්‍රවර්ධනය කිරීමට ඔහු බලාපොරොත්තු විය. ඔහු මේ සඳහා පාපන්දු පුහුණු මධ්‍යස්ථානයක් ආරම්භ කළේය. පුහුණු මධ්‍යස්ථානයට බොහෝ අය සම්බන්ධ නොවූ හෙයින් ඔහු භාරයන් දෙකක් පිහිටුවීය. (i) ඔහුගේ සියලුම පිරිමි පැවතෙන්නන්ට ක්‍රීඩාව පුහුණු කිරීම සඳහා සහ (ii) ඔහුගේ පාපන්දු පුහුණු මධ්‍යස්ථානයට සම්බන්ධ වන ඕනෑම කෙනෙකුට නොමිලේ පුහුණු ලබා දීම සඳහා.

*********

# UNIVERSITY OF COLOMBO, SRI LANKA
# FACULTY OF LAW

## BACHELOR OF LAWS EXAMINATION, YEAR II (Online) - 2020

## Equity and Law of Trusts

(Three Hours)

Total Number of Questions: **06**

Answer **THREE (03)** questions and **no more.**
(Candidates will be penalized for illegible handwriting.)

---

1. "Equity does not apply defined rules, it evaluates specific conduct; this requires flexibility and discretion. Most equitable principles are based upon discretionary standards of conduct rather than definitive rules; these standards usually stem from the basic precepts of good faith, honesty and generosity, and in this sense are relational in nature."

   Samantha J Hepburn, *Principles of Equity and Trusts* (2$^{nd}$ edn; Cavendish Publishing (Australia) Pty Limited, 2001) PP. 7-8

   Critically evaluate the above statement in light of the nature of equity and maxims of equity. Support your answer with relevant authorities.

2. Discuss whether a valid trust has been established in the following circumstances. Support your answer with the relevant statutory provisions and decided cases.

   a) By her will, Teena gave her residuary estate to her friend, Harrison, stating that, 'as I have full confidence in him that if he should die without any other lawful issue, he will leave the bulk of my estate to my two sisters'. Harrison wishes to sell the property.

   b) Andrew made an oral statement to his mistress, Camelia, to dispose his property consisting 'Ocean View' luxury villa and his Mercedes-Benz car to his only

daughter aged eleven years. However, Camelia intends to sell the said properties to settle the bills of creditors.

c) Francisca stated on her last will that, 'I request that my mother Catherina leaves the property or what remains of it on her death to my two children'. Francisca died leaving half of her estate to her mother Catherina. Catherina transferred all of her property to the Kensington Elderly Care home.

d) Leonard left two houses on trust by his last will and directed his trustee 'to transfer one, whichever she may think proper to my daughter Maria and to transfer the other to my daughter Charlotte'. Maria predeceased the testator.

3. "The common law remedy of damages is available as of right, but it often proves inadequate. Damages are not very helpful if the subject matter of the contract that has been breached is something unique or irreplaceable. Nor will damages suffice if the breach of contract involves continuing conduct or a harm that once done cannot be reversed."

   Analyze the above statement in light of equitable remedies. Your answer should be supported by relevant authorities.

4. Answer both (A) and (B).

A) Mr. Antonio and Mrs. Antonio in their pre-nuptial agreement stated that their respective properties should devolve on the survivor and then in favour of their children. Mrs. Antonio died after two years of Bryan's birth who is the only son of Antonio's family. Mr. Antonio remarried to Cristina and had two daughters. He died without a last will. Soon after his death, Cristina acquired the possession of his entire estate and did not allow Bryan to access the premises. Cristina is now searching for buyers to sell the whole property.

   Bryan seeks your advice. Advise him on the applicable statutory provisions and case law.

B) 'Regal Cinema' owned one cinema theatre in Colombo and wanted to acquire one more with a view to selling the two cinema theatres together. To that end, they formed a subsidiary company to buy the other cinema theatre but, had insufficient capital to purchase. Two of the directors of Regal Cinema bought some of the shares in the subsidiary, thus providing the necessary capital and the new cinema theatre was purchased. Both cinemas were sold as one company, renamed as 'New Regal Cinema'. At the moment of selling the two cinema theatres together, the directors made a substantial profit on the sale of their shares.

The new controllers of 'New Regal Cinema' plan to file an action to recover the profits which the directors had made on the sale of the shares, alleging that the directors were in breach of their fiduciary duty to the company.

Advise to New Regal Cinema.

5. Appuhamy appointed Charles as trustee to his 20-acre coconut plantation and a hotel located in the coconut plantation in Puttalama for the benefit of his children Ravindu, Ruwan and Casilda in 1999. In 2001, on the death of Appuhamy, Ravindu got to know that Charles has failed to get the possession of 70 perches of the coconut plantation when fencing it. Ravindu informed about this to his father-in-law Sumanasiri, whose coconut plantation was next to the trust property. Sumanasiri occupied the stated 70 perches of coconut plantation from the trust property and fenced and continued it with his coconut plantation as one property in 2002. Sumanasiri gave Rs. 700,000 to Ravindu to remain silent about this fraud. Ravindu, Ruwan and Casilda wish to sell the hotel and divide the money among themselves to startup their own businesses and requested Charles to search for buyers. Ruwan, introduced his friend Premasiri to Charles and recommended Charles to sell the property to Premasiri. Ravindu and Casilda agreed to the arrangement and the Hotel was sold to Premasiri. Later, Casilda gets to know that Ruwan has obtained a sum of money from Premasiri to sell the hotel to him below the market price.

   Advise all the parties as to their rights and liabilities that arise in the given scenario.

6. Dharmasiri, the Chief Executive Officer of Dharma Private Limited, wishes to know the validity of the charitable trusts set up by him under the following situations.

   (a) Dharmasiri is a pet lover and he was interested to protect the street dogs and cats. He visited an orphanage where orphan children and orphan dogs were maintained. He set up a trust to provide healthy meal for the orphan children and the dogs.

   (b) Dharma Private Limited has 1500 employees. Dharmasiri got to know that some of the children of his employees are unable to continue their higher studies due to lack of adequate income. Dharmasiri created a trust to provide laptops and accommodation for the children of his employees who get a placement at any of the state Universities in Sri Lanka for their higher studies.

   (c) Dharmasiri is a football player and he wished to promote the game as much as he could. He started a football coaching center for this purpose. As not many people joined at the coaching center he set up two trusts (i) to coach the game to all his male descendants and (ii) to anyone who joins his football coaching center by providing free coaching.

**********

**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சட்ட பீடம்**

**சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு II (இணையம் மூலமானது) – 2020**

# ஒப்புரவு மற்றும் நம்பிக்கைகள் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **06**

எவையேனும் **<u>மூன்று (03)</u>** வினாக்களுக்கு **<u>மட்டும்</u>** விடையளிக்க.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. ''ஒப்புரவானது வரையறுக்கப்பட்ட விதிகளை ஏற்புடைமை செய்யாமல், குறிப்பான நடத்தையை மதிப்பீடு செய்கிறது; இது நெகிழ்வுத் தன்மையையும் தற்றுணிபையும் தேவைப்படுத்துகிறது. பெரும்பாலான ஒப்புரவுக் கோட்பாடுகளானவை வரையறுக்கப்பட்ட விதிகளிலும் பார்க்க நடத்தை தொடர்பான தராதரங்களின் தற்றுணிபின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன; இத் தராதரங்கள் வழமையாக நல்லெண்ணம், நேர்மை மற்றும் பெருந்தன்மை என்பவற்றின் அடிப்படை விதிமுறைகளிலிருந்து எழுகின்றன என்பதுடன், இத்தகைய தன்மையில் இயல்பில் தொடர்புடையவையுமாகும்.''

   Samantha J Hepburn, *Principles of Equity and Trusts* (2nd edn; Cavendish Publishing (Australia) Pty Limited, 2001) PP. 7-8

   ஒப்புரவின் இயல்பு மற்றும் ஒப்புரவு மூதுரைகள் என்பவற்றின் பின்னணியில் மேற்போந்த கூற்றிணை நுணுக்கமாக மதிப்பிடுக. உமது விடையினை பொருத்தமான அதிகாரங்களினால் ஆதாரப்படுத்துக.

2. பின்வரும் சூழ்நிலைகளில் வலிதான நம்பிக்கை ஒன்று தாபிக்கப்பட்டுள்ளதா என ஆராய்க. உமது விடையினைப் பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களினால் ஆதாரப்படுத்துக.

   அ) டீனா என்பவள் தனது உயிலின் மூலமாக அவளது எஞ்சிய சொத்தினை, 'வேறெந்த சட்டபூர்வமான வாரிசுகளும் இன்றி அவன் இறக்க வேண்டியிருப்பின், எனது மொத்த சொத்தினையும் எனது இரு சகோதரிகளுக்கு அவன் விட்டுச் செல்வான் என அவன் மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது' எனக்

குறிப்பிட்டு அவளது நண்பனான ஹரிசன் என்பவனுக்கு வழங்கினாள். ஹரிசன் அச் சொத்தினை விற்பதற்கு விரும்புகிறான்.

ஆ) அன்ட்ரியு என்பவன் ‘ஓஷன் வியூ’ எனப்படுவதான ஆடம்பர மாளிகை மற்றும் அவனது மேர்சிடீஸ்-பென்ஸ் மோட்டார் வாகனம் உள்ளடங்கலான அவனது சொத்தினை பதினொரு வயதுடைய அவனது ஒரே மகளுக்கு ஒப்படைக்குமாறு அவனுடைய வைப்பாட்டியான கமிலியா என்பவளுக்கு வாய்மொழி மூலமானதோர் கூற்றினை மேற்கொண்டான். இருப்பினும், கமிலியா கடன் வழங்கியவர்களின் கடன்களைத் தீர்ப்பதற்கு குறித்த ஆதனங்களை விற்க எண்ணுகிறாள்.

இ) பிரான்சிஸ்கா என்பவள், ‘எனது தாய் கத்தரினா தனது இறப்பின் மீது அவரது சொத்தினை அல்லது அதில் எஞ்சியதை எனது இரண்டு பிள்ளைகளுக்கு விட்டுச் செல்லுமாறு நான் வேண்டுகிறேன்’ என தனது இறுதிவிருப்பாவணத்தில் குறிப்பிட்டாள். பிரான்சிஸ்கா அவளது சொத்தில் அரைவாசியினை அவளது தாய் கத்தரினாவிடம் விட்டுவிட்டு இறந்தாள். கத்தரினா அவளது சொத்துக்கள் அனைத்தையும் கென்சிங்டன் முதியோர் பராமரிப்பு இல்லத்திற்குக் கைமாற்றினாள்.

ஈ) லியோனார்ட் என்பவன் அவனது இறுதிவிருப்பாவணத்தின் மூலம் இரண்டு வீடுகளை நம்பிக்கையில் விட்டுச் சென்றதுடன் ‘அவள் சரியானதெனக் கருதுகின்றதான அத்தகைய ஒன்றினை எனது மகள் மரியாவிற்கும் மற்றயதை எனது மகள் சார்லோத்தேவிற்கும் கைமாற்றுக’ என அவனது நம்பிக்கையாளருக்குப் பணித்தான். மரணசாசனக்காரருக்கு முன்பாகவே மரியா மரணமடைந்தாள்.

3. “பொதுச் சட்ட பரிகாரமான சேதஈடானது உரிமையாகக் கிடைக்கின்றது எனினும், பொதுவாக அது போதாதென்பதைக் காட்டுகின்றது. ஒப்பந்த மீறலுக்கு உட்பட்ட விடயப் பொருளானது தனித்துவமானதாக அல்லது ஈடுசெய்யப்பட முடியாததாகக் காணப்படின் சேதஈடு மிகவும் பயனுள்ளதாக அமையாது. ஒப்பந்த மீறலானது தொடர்ச்சியான நடத்தை அல்லது ஒருதடவை செய்யப்பட்டிருப்பின் மாற்றப்பட முடியாத ஓர் தீங்கினை உள்ளடக்கியிருப்பினும் சேதஈடு போதுமானதாக அமையாது.”

ஒப்புரவுப் பரிகாரங்களின் பின்னணியில் மேற்போந்த கூற்றினை ஆராய்க. உமது விடையானது பொருத்தமான அதிகாரங்களினால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

4. (அ) மற்றும் (ஆ) பகுதிகள் இரண்டிற்கும் விடையளிக்க.

அ) திரு. அந்தோனியோ மற்றும் திருமதி. அந்தோனியோ ஆகிய இருவரும் தமது ஆதனங்களானவை தமது ஒருவரின் இறப்பின் பின் உயிர்வாழ்பவரின் மீதும் அதன் பின்னர் தமது பிள்ளைகளின் சார்பிலும் ஒப்படைக்கப்படல் வேண்டும் என அவர்களது திருமணத்திற்கு முன்னரான உடன்படிக்கையில் குறிப்பிட்டனர். அந்தோனியோ குடும்பத்தின் ஒரே மகனான ப்ரியன் என்பவன் பிறந்து இரண்டு ஆண்டுகளின் பின்னர் திருமதி. அந்தோனியோ மரணமடைந்தாள். திரு. அந்தோனியோ கிரிஸ்டினா என்பவளை மறுமணம் புரிந்தான் என்பதுடன் அவனுக்கு இரு பெண் பிள்ளைகளும் இருந்தனர். அவன் ஓர் இறுதிவிருப்பாவணமின்றி மரணித்தான். அவனது இறப்பினைத் தொடர்ந்து, கிரிஸ்டினா அவனது மொத்த சொத்தினதும் உடைமையைப் பெற்றுக் கொண்டாள் என்பதுடன் அவ் இடப்பரப்புக்களை அணுகுவதற்கு ப்ரியனை அனுமதிக்கவில்லை. தற்போது கிரிஸ்டினா மொத்த ஆதனத்தினையும் விற்பதற்குக் கொள்வனவாளர்களைத் தேடிக் கொண்டிருக்கின்றாள்.

ப்ரியன் உமது ஆலோசனையை நாடுகிறான். ஏற்புடையதான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டம் என்பவற்றின் மீது அவனுக்கு ஆலோசனை வழங்குக.

ஆ) 'ரீகல் சினிமா' ஆனது கொழும்பில் ஓர் சினிமா திரையரங்கினைச் சொந்தங் கொண்டுள்ளதுடன் இரண்டு சினிமாத் திரையரங்குகளையும் ஒன்றாக விற்பனை செய்யும் நோக்குடன் மேலும் ஒன்றினை வாங்குவதற்கும் விரும்பியது. அந்த முடிவுக்கு ஏற்றாற்போல், மற்றைய சினிமா திரையரங்கினைக் கொள்வனவு செய்வதற்கு அவர்கள் துணைநிலைக் கம்பனியொன்றினை உருவாக்கினர் எனினும், கொள்வனவு செய்வதற்குப் போதியளவு மூலதனம் காணப்படவில்லை. அவசியமான மூலதனத்தினை வழங்கும் பொருட்டு துணைநிலைக் கம்பனியின் சில பங்குகளினை ரீகல் சினிமாவினுடைய இரு இயக்குனர்கள் வாங்கினார்கள் என்பதுடன் புதிய சினிமா திரையரங்கு கொள்வனவும் செய்யப்பட்டது. இரு சினிமாக்களும் ஒரே கம்பனியாக, 'நியூ ரீகல் சினிமா' என மீள் பெயரிடப்பட்டு விற்கப்பட்டன. இரு சினிமா திரையரங்குகளும் ஒன்றாக விற்பனை செய்யப்பட்ட நேரத்தில், அவர்களது பங்குகளின் விற்பனை மீது இயக்குனர்கள் கணிசமான அளவு இலாபத்தை மேற்கொண்டனர்.

இயக்குனர்கள் கம்பனிக்கான தமது நம்பகக் கடமையினை மீறியுள்ளனர் எனக் குறிப்பிட்டு, பங்குகள் விற்பனை தொடர்பாக இயக்குனர்கள்

மேற்கொண்ட இலாபத்தினை மீட்பதற்கான வழக்கொன்றைப் பதிவுசெய்ய 'நியூ ரீகல் சினிமாவினுடைய' புதிய கட்டுப்பாட்டாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

நியூ ரீகல் சினிமாவிற்கு ஆலோசனை வழங்குக.

5. அப்புஹாமி என்பவன் தனது பிள்ளைகளான ரவிந்து, ருவான் மற்றும் கசில்டா ஆகியோரின் நன்மைக்காக புத்தளம் பிரதேசத்திலுள்ள அவனது 20 ஏக்கர் தென்னந் தோட்டம் மற்றும் தென்னந் தோட்டத்தில் அமைந்துள்ள ஓர் உணவுவிடுதி என்பவற்றுக்கு 1999 இல் சார்லஸ் என்பவனை நம்பிக்கையாளனாக நியமித்தான். 2001 இல், அப்புஹாமியின் இறப்பின் மீது, தென்னந் தோட்டத்திற்கு வேலியிடுகின்ற போது அதில் 70 பேர்ச்சஸினுடைய உடைமையினை சார்லஸ் பெறத் தவறிவிட்டான் என்பதை ரவிந்து அறிந்தான். நம்பிக்கை ஆதனத்திற்கு அடுத்ததாகத் தென்னந் தோட்டத்தினைக் கொண்டிருந்த தனது மாமனாரான சுமனசிறி என்பவனிடம் ரவிந்து இது தொடர்பாக அறிவித்தான். 2002 இல் நம்பிக்கை ஆதனத்திலிருந்து குறித்த 70 பேர்ச்சஸ் தென்னந் தோட்டத்தினை சுமனசிறி ஆக்கிரமித்ததுடன் அதற்கு வேலியிட்டு அவனது தென்னந் தோட்டத்துடன் ஒரே ஆதனமாகத் தொடர்ந்து வைத்திருந்தான். இம் மோசடி தொடர்பில் தொடர்ந்து அமைதியாக இருப்பதற்கென சுமனசிறி ரூ. 700,000 இனை ரவிந்துவிற்கு வழங்கினான். ரவிந்து, ருவான் மற்றும் கசில்டா ஆகியோர் உணவுவிடுதியினை விற்பதற்கும் அப் பணத்தினைத் தமக்கிடையே பங்கிட்டு அவர்களுடைய சொந்த வியாபாரங்களைத் தொடங்குவதற்கும் விரும்புவதுடன் கொள்வனவாளர்களைத் தேடும்படி சார்லஸிடம் கோரினர். ருவான், தனது நண்பனான பிறேமசிறி என்பவனை சார்லஸிற்கு அறிமுகப்படுத்தியதுடன் அவ் ஆதனத்தைப் பிறேமசிறிக்கு விற்பதற்கு சார்லஸிடம் பரிந்துரைத்தான். ரவிந்துவும் கசில்டாவும் இவ் ஏற்பாட்டிற்கு உடன்பட்டனர் என்பதுடன் உணவுவிடுதியானது பிறேமசிறிக்கு விற்கப்பட்டது. சந்தை விலைக்குக் குறைவாக உணவுவிடுதியினை அவனுக்கு விற்பதற்கு பிறேமசிறியிடமிருந்து ருவான் குறித்த ஓர் தொகைப் பணத்தினைப் பெற்றுக் கொண்டான் என கசில்டா பின்னர் அறிகின்றாள்.

தரப்பட்டுள்ள சூழ்நிலையில் எழுகின்ற அவர்களது உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பில் அனைத்து திறத்தவர்களிற்கும் ஆலோசனை வழங்குக.

6. Dharma Private Limited இனுடைய தலைமை நிர்வாக அதிகாரியான தர்மசிறி என்பவர், பின்வரும் சூழ்நிலைகளில் தன்னால் அமைக்கப்பட்ட தர்ம நம்பிக்கைகளின் வலிதாந் தன்மை தொடர்பில் அறிய விரும்புகிறார்.

(அ) தர்மசிறி செல்லப் பிராணிகளை நேசிக்கும் ஒருவர் என்பதுடன் தெரு நாய்கள் மற்றும் பூனைகளைப் பாதுகாப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். அவர் ஆதரவற்ற சிறுவர்கள் மற்றும் ஆதரவற்ற நாய்கள் பராமரிக்கப்படும் ஓர் ஆதரவற்றோர் இல்லத்திற்குச் சென்றிருந்தார். அவர் ஆதரவற்ற சிறுவர்கள் மற்றும் நாய்களுக்கு ஆரோக்கியமான உணவினை வழங்குவதற்கு ஓர் நம்பிக்கையை அமைத்தார்.

(ஆ) Dharma Private Limited ஆனது 1500 தொழிலாளர்களைக் கொண்டுள்ளது. போதிய வருமானமின்மையின் காரணமாக தனது தொழிலாளர்கள் சிலரின் பிள்ளைகள் அவர்களது உயர் கல்வியினைத் தொடர முடியாமலிருக்கின்றனர் என தர்மசிறி அறிந்தார். தமது உயர் கல்விக்கான ஓர் இடத்தினை இலங்கையின் எந்தவொரு அரச பல்கலைக்கழகங்களிலும் பெறுகின்ற தனது தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு மடிக்கணிணிகள் மற்றும் தங்குமிட வசதியினை வழங்குவதற்கென தர்மசிறி நம்பிக்கையொன்றினை உருவாக்கினார்.

(இ) தர்மசிறி ஓர் கால்பந்து விளையாட்டு வீரர் என்பதுடன் அவ் விளையாட்டினைத் தன்னால் முடியுமான அளவிற்கு மேம்படுத்துவதற்கும் விரும்பினார். இந் நோக்கத்திற்காக கால்பந்து விளையாட்டுப் பயிற்சி நிலையமொன்றினை ஆரம்பித்தார். அதிகளவான ஆட்கள் இப் பயிற்சி நிலையத்தில் இணையவில்லை என்பதனால் (i) அவரது ஆண் சந்ததியினர் அனைவருக்கும் அவ் விளையாட்டைப் பயிற்றுவிப்பதற்கும் (ii) அவரது கால்பந்து பயிற்சி நிலையத்தில் இணைகின்ற எவருக்கும் இலவச பயிற்சியினை வழங்குவதற்குமென அவர் இரு நம்பிக்கைகளை அமைத்தார்.

******************************